# கரூரில் முதல்வர் படைப்பகம் - நலத்திட்ட உதவிகள்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. திறந்து வைத்து வழங்கினார்!

கரூர், மார்ச் 15 –

கரூரில் புதிதாக கட்டப்பட்ட முதல்வர் படைப்பகம், அரசு இசைக் கல்லூரி, நவீன உடற்பயிற்சி கூடத்தினை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி திறந்து வைத்தார். 47 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும் வழங்கினார்.

ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதியதாக முதல்வர் படைப்பகம். ரூ. 1.78 கோடி மதிப்பீட்டில் அரசு இசைப் பள்ளிக்கு புதிய கட்டடம், ரூ 61.60 லட்சம் மதிப்பீட்டில் புதிய உடற்பயிற்சிக் கூடம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**முதல்வர் படைப்பகம் திட்டம்**

நவீன அறிவியல் மாற்றத்திற்கேற்ப மாணாக்கர்கள் தங்களுடைய திறன்களை மேம்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசால் சிறுகுறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்க முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

தொழில்முனைவோர் தங்களின் புதிய தயாரிப்புகளை உருவாக்குவதற்கும். வடிவமைப்பு செய்வதற்கும் தேவையான நவீன இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதி களை ஒரே இடத்தில் வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதனடிப்படையில் தரைதளத்தில் பகிர்ந்த பணியிட சேவை வழங்கப்படுகிறது.

இங்கு மென்பொருள் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த நிறுவனம் நடத்துவோர் 38 பேர் பணி யாற்ற இருக்கைகள் மேஜைகள் அமைக்கப்பட்டுள்ளன.

முதல் தளமானது கல்வி மையமாக செயல்படுகிறது. இங்கு ஒரே நேரத்தில் 51 பேர் அமர்ந்து படிக்கும் வகையில் வசதிகள் உள்ளன. இங்கு யு.என்.பி.எஸ்.சி. யு.பி.எஸ்.சி. ஆர்.ஆர்.பி. நீட் உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்கான நூல்கள் கிடைக்கும். மாணவர்களிடம் லேப்டாப் இருந்தால், அதையும் இங்கு கொண்டு வந்து பயன்படுத்தலாம். இணையதளத்தில் தகவல் தேட வசதியாக FREE WIFI மற்றும் 3 கணிணிகளும் நிறுவப்பட்டுள்ளன.

கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் ரூ.1.78 கோடி மதிப்பீட்டில் சுமார் 5,369 சதுர அடி பரப்பளவுடன் கட்டப்பட்டுள்ள அரசு இசைப் பள்ளி கட்டடம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் ரூ. 61.60 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பபட்ட உடற்பயிற்சி கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வருவாய்த் துறை சார்பில் கரூர் வட்டத்தைச் சேர்ந்த 84 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 47 மாற்றுத்திற னாளிகளுக்கு ரூ.49.73 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி வழங்கினார்.

கரூர் மாநகராட்சி வார்டு 2 ஜாமியா நகரில் ரூ. 65லட்சம் மதிப்பீட்டில் புதிதாக தார்ச்சாலை அமைக்கும் பணி மற்றும் ரூ.45. லட்சம் மதிப்பீட்டில் புதிதாக மழை நீர் வடிகால் அமைக்கும் பணி என மொத்தம் ரூ. 1.30 கோடி மதிப்பீட்டிலான புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளையும் செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார்.

அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ, மாவட்ட வருவாய் அலுவலர் விமல் ராஜ், மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாநக ராட்சி ஆணையர் கே.எம்.சுதா, துணை மேயர் ப.சரவணன், மண்டலக் குழு தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ். ஆர். எஸ்.ராஜா. அன்பரசன், சக்திவேல் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வளத்தியில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்!

*செஞ்சி, மார்ச் 15-*

*விழுப்புரம் மாவட்டம் சமூக நலத் துறை சார்பில் செஞ்சி, மேல்மலையனூர், வல்லம் ஆகிய வட்டாரங்களைச்சேர்ந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ்சமுதாய வளைகாப்பு விழா நிகழ்ச்சி மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி ஊராட்சியில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு திருமண மண்டபத்தில் நடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.*

*ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், வல்லம் அமுதா ரவிக்குமார் ,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்ஆகிய முன்னிலை வகித்தனர்.*

*ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்செளமியா அனைவரையும் வரவேற்றார்.*

*நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல். ஏ கலந்து கொண்டு 300 கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு விழா நிகழ்ச்சியை தொடங்கி வைத்து அவர்களுக்கு சீர் வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.*

*அப்போது முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ நிகழ்ச்சியில் பேசுகையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.*

*அந்த வகையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெரும் அனைத்து இல்லத்தரசிகளுக்கும் 5 ஆயிரம் ரூபாயும்,முதியோர் உதவித்தொகை பெருபவர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு 2000 ரூபாய் வழங்கிய முதலமைச்சர் பெண்களுக்கு மகளிர் விடியல் பயணத்தை அறிவித்து இன்று பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல் படுத்தி வருகிறார்.*

*மேலும் பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்ட வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். _*

*நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், நாராயண மூர்த்தி, துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெய்சங்கர், ஏகாம்பரம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள்மனோ சித்ரா,சரிதா, ஊராட்சி மன்ற தலைவர்விஜயலட்சுமி ஜெயக்குமார்,துணைத் தலைவர் கோவிந்தராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

# 169வது வட்டம் ஆர்.சேகர் தாயார் ஆர்.ஆலையம்மாள் படத் திறப்பு !

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து அஞ்சலி!



சென்னை, மார்ச் 15-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 169 வது வட்டக் கழக முன்னாள் செயலாளர் ஆர். சேகர் தாயாரும் சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சே.அருண் அவர்களின் பாட்டியுமான ஆர். ஆலையம்மாள் அண்மையில் இயற்கை எய்தினார்

அம்மையாரின் திருவுருவப் படத் திறப்பு நிகழ்ச்சி நேற்று(14.3.2026 -சனிக்கிழமை) இரவு 7.00 மணிக்கு சின்னமலை வேளச்சேரி சாலையில் உள்ள ஆர்.சேகர் இல்லத்தில் வைத்து வட்டக் கழக செயலாளர் எல். ஆரோக்கியராஜ் தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அவர்கள் அம்மையாரின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்தினார்.

நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் பகுதி கழக செயலாளர்கள் இரா.துரைராஜ் எம்.சி. எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# தேர்தல்கள் - தேர்தல் அறிக்கைகள் வரலாறு!


**பேராசிரியர் முனைவர் சு. கிருஷ்ணசாமி**

முன்னாள் உறுப்பினர்
ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம்




உலகில் 251 நாடுகள் உள்ளன. அவற்றில் 195 நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினர்களாகும். அதில் வாடிகன் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய இரண்டும் பார்வையாளர் நாடுகள். 2019 ஆம் ஆண்டு கணக்குப்படி ஐக்கிய நாடுகள் சபையில் 193 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

உலகில் 7 கண்டங்கள் உள்ளன. அவற்றில் ஆசிய கண்டத்தில் 48 நாடுகள், ஆப்பிரிக்கா கண்டத்தில் 54 நாடுகள், ஐரோப்பா கண்டத்தில் 44 நாடுகள், வட அமெரிக்கா கண்டத்தில் 23 நாடுகள், ஆஸ்திரேலியா கண்டத்தில் 14 நாடுகள், தென்;அமெரிக்கா கண்டத்தில் 12 நாடுகள் உள்ளன. அன்டார்டிகா கண்டத்தில் நாடுகள் இல்லை.

ரஷ்யா, கியூபா,சீனா, வடகொரியா, வியட்நாம், ஆகியவை கம்யூனிச நாடுகள். அமெரிக்கா, இங்கிலாந்து,ஜெர்மனி, பிரான்ஸ் ஆகியவை முதலாளித்துவ நாடுகள். உலகில் 50 இஸ்லாமிய நாடுகள், 15 கிறிஸ்தவ நாடுகள், 8 பௌத்த சமய நாடுகள் உள்ளன. இஸ்ரேல் யூத சமய நாடு. நேபாளம் இந்து சமய நாடு ஆகும்.

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், ஓமன், குவைத் போன்ற மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் தாலிபன் ஆட்சியின் கீழ் உள்ள ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் கட்சிகளுக்கு விதிக்கப்பட்டுள்ளது. அங்கு அரசியல் கட்சிகள் இல்லை. தென் கொரியா, லாவோஸ், வியட்நாம், சீனா, தாய்லாந்து, சவுதி அரேபியா போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் தேர்தல்கள் இல்லை. எரித்திரே எனும் ஆப்பிரிக்க நாட்டிலும் தேர்தல் இல்லை.

பாஸ்ஷோ நாட்டில் அரசியல் கட்சிகள் செய்யப்பட்டுள்ளன. அங்கு ராணுவ ஆட்சி நடைபெறுகிறது. பசிபிக் தீவு நாடுகளான பலாவு, மைக்ரோநேசியா,நியூவே, துவாலு மற்றும் தென் அமெரிக்காவில் உள்ள பாக்லாந்து தீவுகள் போன்ற நாடுகளில் அரசியல் கட்சிகள் இல்லை. அங்கு குடும்ப ஆட்சி நடைபெறுகின்றது. இரண்டாம் உலகப்போருக்கு பிறகு இந்தியா, மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் மக்களாட்சி ஏற்பட்டது. அதன் பின் அங்கு தேர்தல்கள் நடக்கின்றன. 1970 க்கு பிறகு தென் கொரியா,துருக்கி ஈரான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் தேர்தல் முறை ஏற்பட்டது.

நெதர்லாந்து, ஸ்வீடன், இங்கிலாந்து, ஜப்பான், தாய்லாந்து, பூட்டான், மலேசியா, ஸ்பெயின், டென்மார்க், போன்ற நாடுகளில் அரசியல் சாசனத்திற்கு உட்பட்ட மன்னராட்சி நடைமுறையில் உள்ளது. குவைத், சவுதி அரேபியா, ஓமன், புரூனே, பஹ்ரைன், கத்தார், ஜோர்டான், ஐக்கிய அரபு அபிரகம், வடகொரியா, லாவோஸ், கியூபா,வியட்நாம் ஆகிய நாடுகள் நேரடியான மன்னர் ஆட்சியின் கீழ் உள்ளன.

உலகத்தில் 43 நாடுகளில் மன்னராட்சி முறை உள்ளது. உலகில் 25 நாடுகளில் முழு ஜனநாயகம், 46 நாடுகளில் பாதி ஜனநாயகம் என 81 நாடுகளில் ஜனநாயகம் நடைமுறையில் உள்ளது. அதில் 70 க்கும் மேற்பட்ட நாடுகளில் மட்டும்தான் தேர்தல்கள் நடைபெறுகின்றன. அவற்றில் சில நாடுகளில் அறிக்கைகள் வெளியிடப் படுகின்றன.

### தேர்தல் வரலாறு

வேதகாலத்தில் கி.மு 3000 முதல் கிமு 1000 வரை மக்கள் ஜனநாயகம் இருந்தது. சபா, சமுதி ஆகிய சமூக அமைப்புகள் வேதகாலத்தில் இருந்தன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடும் இடம் சமிதி என்று அழைக்கப்பட்டது. மூத்தவர்கள், சான்றோர்கள் கூடும் இடத்திற்கு சபா என்ற பெயர் வழங்கப்பட்டது..

கிமு 600 ஆம் ஆண்டிற்கு பிறகு இந்தியாவில் பரவலாக புரம் மற்றும் ஜனபத எனும் நிர்வாக முறை இருந்தது. புரம் என்பது நகரத்தின் நிர்வாக ஆட்சி முறை ஆகும். ஜனபத என்பது சட்டமன்றம் போன்ற பெரிய சபை ஆகும்.

கிமு 500 ஆம் ஆண்டு காலத்தில் இந்தியாவில் மகாஜன பதங்களுக்கும், புத்த சங்கங்களுக்கும் உரிய சமய தலைவர்கள் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். புத்தர் காலத்தில் கிழக்கு இந்தியாவில் குடியாட்சி முறை இருந்தது. ஆரேட்டர், கட்டியவர், மாலவர் ஆகியோர் மக்களாட்சி நடத்தினார்கள்.

சோழர்கள் ஆட்சி காலத்தில் கிராம சபைகள் மற்றும் குடவோலை தேர்தல் முறை இருந்தது. உத்திரமேரூர் கல்வெட்டு சோழர்கள் காலத்தில் நடந்த குடவோலை தேர்தல் முறை பற்றி விரிவாக கூறுகின்றது சோழர் ஆட்சியில் ஊராட்சி அமைப்புகள் நன்கு செயல்பட்டன. நகரம், சதுர்வேதி மங்கலம், ஊர் என பல பகுதிகளாக நிர்வாகம் பிரிக்கப்பட்டு இருந்தது. ஒவ்வொரு அமைப்பிலும் குழுக்கள் இருந்தன. ஒவ்வொரு குழுக்களிலிருந்தும் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்டு ஊர்சபைகள் பல வாரியங்கள் அமைக்கப்பட்டன.தோட்ட வாரியத்தில் 12 உறுப்பினர்கள் இருந்தனர். ஏரி வாரியம், பஞ்ச வாரியம்,பொன் வாரியம் ஆகிய வாரியங்களில் தலா 6 தேர்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்தனர்.

குடவோலை தேர்தல்கள் மக்கள் முன்னிலையில் நடைபெற்றன. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை தனித்தனியாக ஓலைச்சுவடிகளில் எழுதி அவற்றை ஒரு குடத்திற்குள் போட்டு குலுக்கி குடத்தில் இருக்கும் ஓலை சுவடியில் ஒன்றை ஒரு குழந்தையை அழைத்து. எடுக்கச் சொல்வார்கள். அக்குழந்தை எடுத்துக் கொடுத்த அந்த சீட்டில் உள்ள பெயர் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயராக தேர்தல் பொறுப்பாளர்களால் அறிவிக்கப்பட்டது.

Demokratia எனும் கிரேக்க சொல்லில் இருந்து Democracy எனும் ஆங்கில சொல் உருவானது. கிமு 1000 ஆவது ஆண்டில் ஜனநாயக தேர்தல்கள் நடைமுறையில் இருந்தன. ஐலாந்து (Iceland) பாராளுமன்றத்திற்கு கிமு 930 ஆம் ஆண்டு தேர்தல் நடந்தது ரோமில் கிமு 535 இல் முதன்முதலில் பிளாட்பார்ம் platform எனும் அரசியல் மேடை முறை தோன்றியது.

ரோமானிய பேரரசில் கிமு 509 - 527 இல் தேர்தல் நடந்தது. ரோமானிய பேரரசு காலத்தில் போப்பாண்டவர்களை தேர்ந்தெடுக்க அங்கு தேர்தல்கள் நடைபெற்றன. ஏத்தன்ஸ், கிரீசில் கிமு 500இல் பொது இடங்களில் மக்கள் கூடி தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தனர். ஜனநாயகம் அங்கு தான் நடைமுறையானது. 1295 ஆம் ஆண்டு இங்கிலாந்து பாராளுமன்றம் தேன்றியது. பின்னர் 1625 ஆம் ஆண்டு சார்லஸ் மன்னர் காலத்தில் மக்கள் உரிமை சாசனம் வெளியிடப்பட்டது. இங்கிலாந்தில் 1820 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயக கட்சிதான் உலகில் முதன் முதலில் தோன்றிய அரசியல் கட்சி ஆகும். இங்கிலாந்தில் 1820 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயக கட்சிதான் உலகில் முதன் முதலில் தோன்றிய அரசியல் கட்சி ஆகும்

4-7-1776 அன்று அமெரிக்கா விடுதலை பெற்றது.1776 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. 1787 ல் அமெரிக்க செனட் சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டது. 1789ஆம் ஆண்டு நடந்த பிரெஞ்சு புரட்சிக்கு பிறகு பிரான்சில் தேர்தல் முறை தோன்றி மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. 1828க்கு பிறகு லத்தின் அமெரிக்க நாடுகளில் தேர்தல் முறை அறிமுகமானது. அர்ஜெண்டைனா, சிலி, கொலம்பியா, உருகை போன்ற நாடுகளில் தேர்தல்கள் நடந்தன.1832 ஆம் ஆண்டு மக்களுக்கு உயர் சபைகளில் பிரதிநித்துவம் வழங்கப்பட்டது.1888 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளை மக்கள் நேரடியாக தேர்வு செய்யும் முறை இருந்தது.

1867 மற்றும் 1884 ஆம் ஆண்டுகளில் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. 1893 ஆம் ஆண்டு ஏத்தன்சில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. இந்தியாலேயே முதன் முதலாக குறிப்பாக சென்னை மாகாணத்தில் 1920 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமையும் தேர்தலில் போட்டியிடும் உரிமையும் சட்டப்படி வழங்கப்பட்டன. 1928 ஆம் ஆண்டிற்கு பிறகு உலகில் பல நாடுகளில் ஆண் பெண் இருபாலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. 1928 ஆம் ஆண்டு இங்கிலாந்திலும்,1944 ஆம் ஆண்டு பிரான்சிலும் 1949 இல் சுவிட்சர்லாந்திலும் வழங்கப்பட்டது.

பெண்களுக்கு வாக்குரிமை ரஷ்ய புரட்சிக்கு பிறகு 1917 ஆம் ஆண்டு ரஷ்யாவில் புதிய அரசாங்கம் அமைந்தது. மக்கள் பிரதிநிதிகள் அரசில் அங்கம் வகித்தனர்.ரஷ்யாவில் ஒரு கட்சி தேர்தல் முறை நடைமுறைக்கு வந்தது.

1921 ஆம் ஆண்டு சீனாவில் கம்யூனிஸ்ட் அரசு உருவானது. முன்பு கி.பி. 1573 முதல் 1795வரை போலந்து நாட்டில் தேர்தல் முறை நடைமுறையில் இருந்தது. அதன் பின் மீண்டும் 1919ஆம் ஆண்டு தேர்தல் முறை நடைமுறைக்கு வந்தது. காலனி ஆதிக்கத்திலிருந்து மீண்ட பல நாடுகளில் 1950 மற்றும் 1960களில் தேர்தல்கள் நடந்தன. மன்னராட்சி முறையிலிருந்து மீண்ட போட்ஸ்வானா போன்ற பல நாடுகளில் மக்களாட்சி ஜனநாயக தேர்தல் முறை ஏற்பட்டது. ராணுவ ஆட்சியில் இருந்து மீண்ட கானா, நைஜீரியா போன்ற நாடுகளில் 1970 களில் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அஸ்கோலா, மொசாம்பிக் ஜிம்பாபாவே போன்ற ஆப்ரிக்க நாடுகளில் தேர்தல்கள் நடந்தன. பெணின், மாலி, ஜாம்பியா போன்ற 12 தென் அமெரிக்கா நாடுகளில் தேர்தல் முறை அறிமுகமானது.

1919 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மான்டெகு சேம்ஸ்போர்டு சட்டம் எனப்படும் இரட்டை ஆட்சி சட்டத்தின்படி இந்தியாவில் அப்போது இருந்த சென்னை, பம்பாய், வங்காளம், பஞ்சாப், அசாம் பீகார், ஒரிசா உள்ளிட்ட பத்து மாகாணங்களில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன்படி சென்னை மாகாணத்தில் 1920,1923, 1926, 1930,1934 மற்றும் 1937 ஆகிய ஆண்டுகளில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இரண்டாம் உலகப்போர் காரணமாக 1937 முதல் இந்தியா விடுதலை பெரும் வரை சென்னை மாகாணத்தில் மட்டுமல்ல இந்தியாவில் எந்த மாகாணத்திலும் தேர்தல்கள் நடைபெறவில்லை

25-1-1950 அன்று இந்திய தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது. 1952 முதல் 1990 வரை தேர்தல்களில் வண்ணப் பெட்டி வாக்கு முறையும், வாக்கு சீட்டு முறையும் நடைமுறையில் இருந்தன. 1990 முதல் தேர்தல்களில் வாக்குப்பதிவு இயந்திரம் முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவையான லோக்சபாவில் 545 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். அதில் இரண்டு பேர் நியமன உறுப்பினர்கள் மீதி 543 பேர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாராளுமன்ற மாநிலங்களவை எனப்படும் ராஜ்யசபையில் 245 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

1952,1957, 1962,1967,1971, 1977,1980, 1984,1989, 1991,1996, 1998,1999, 2004, 2009, 2014,2019, 2024 ஆகிய 18 முறை இந்தியாவில் பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெறுகின்றன. தமிழ் நாட்டில் 6 தேசியகட்சிகள் 60 க்கும் மேற்பட்ட மாநில கட்சிகள் உள்ளன.இந்தியாவில் 2700 அரசியல் கட்சிகள் உள்ளன. அவற்றில் 2064 கட்சிகள் தேர்தல் ஆணையத்தில் பதிவுச்செய்துள்ளன.

### தேர்தல் அறிக்கை வரலாறு

Manifestus எனும் இலத்தீன் சொல்லிலிருந்து Manifesto எனும் ஆங்கில சொல் உருவானது. 1620 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை என்னும் சொல் முதன் முதலில் பயன்பாட்டிற்கு வந்தது. பிரெஞ்சு அறிஞர் ஜீன் ஜகப் ரூசோ அவர்கள் 1762ல் எழுதிய சமூக ஒப்பந்தம் (Social Contract) எனும் நூலில் தேர்தல் அறிக்கை (Election Manifesto) என்பது மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான அரசியல் சமூக ஒப்பந்தம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்தை சேர்ந்த ஜோகுலிட்டி மற்றும் டேவிட் ஆர்மிடேஜ் ஆகிய நூலாசிரியர்கள் கூட்டாக எழுதிய தேர்தல் அறிக்கை வரலாறு எனும் நூல் 2014 ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் பல்கலை கழகத்தால் வெளியிடப்பட்டது என எழுதியுள்ளனர். எம்.வெங்கடராமையா என்பவர் தேர்தல் அறிக்கை எனும் புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார். திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கைகள் 1952 முதல் 2006 வரை எனும் 327 பக்க புத்தகத்தை பொ. தங்கப்பாண்டியன் அவர்கள் தொகுத்து வெளியிட்டுள்ளார். காங்கிரஸ் தலைவர் பட்டாபி சீதாராமையா அவர்கள் எழுதியுள்ள காங்கிரஸ் வரலாறு எனும் புத்தகத்தில் தேர்தல் அறிக்கை என்று தனியாக ஒரு அத்தியாயமே எழுதியுள்ளார். தேர்தல் அறிக்கைகளின் சிறப்பம்சங்கள் பற்றி ஆங்கிலம் தமிழ் மொழிகளில் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

பிரான்சிலிருந்து 1535 ஆம் ஆண்டு உலகின் முதல் தேர்தல் அறிக்கை (Election Manifesto) வெளியிடப்பட்டது. முன்பு . 1803 ல் அரசியல் கட்சிகள் statement of parties எனும் பெயரில் தேர்தல் அறிக்கைகள் வெளியிட்டன. 1803 ஆம் ஆண்டு தேர்தலில் மக்களின் ஆதரவினை கேட்டு பல அரசியல் தலைவர்கள் தனித்தனியாக தேர்தல் அறிக்கைகள்

வெளியிட்டனர். 1834 ஆம் ஆண்டு ராபர்ட் ஃபீல் என்பவர் எழுதிய டோம் வொர்த் அறிக்கை (Tomworth Manifesto) 1835 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த பொதுத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சிக்கான தேர்தல் அறிக்கையாக வெளியிடப்பட்டது.

1875 ஆம் ஆண்டு ஜெர்மனியில் தேர்தல் அறிக்கை வெளியிடும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது. 1891 ஆம் ஆண்டு ஜெர்மனியில் நடந்த தேர்தலை முன்னிட்டு சமூக ஜனநாயக கட்சி தேர்தல் அறிக்கை வெளியிட்டது.

வட அமெரிக்காவிலும் தேர்தல் அறிக்கை வெளி யிடும் முறை இருந்தது. 1815 ஆம் ஆண்டு மதம் சார்ந்த தேர்தலுக்காக அறிக்கை வெளியிடப்பட்டது. 1842 ஆம் ஆண்டு Karl Marx and

Frederick Engels இணைந்து எழுதி வெளியிட்ட Comminist Manifesto மிக சிறந்த அரசியல் சமூக பொருளாதார மக்கள் சாசனம் தேர்தல் அறிக்கை இல்லை. ஆனாலும் அதுவே கம்யூனிஸ்ட் கட்சிகளின் எதிர்கால தேர்தல் அறிக்கைகளுக்கு அடித்தளமான ஆவணமாக அமைந்தது.

தென்னாபிரிக்காவில் 1910 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் தனித்தனியாக தங்கள் கட்சிகளின் சார்பாக தேர்தல் அறிக்கைகள் வெளியிட்டன.

1949 ஆம் ஆண்டு கனடா நாட்டில் நடைபெற்ற தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகள் தங்கள் கட்சி சார்பாக தேர்தல் அறிக்கைகள் வெளியிட்டன. 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் தேர்தல்களில் தேர்தல் அறிக்கைகள் முக்கிய பங்காற்றின. இங்கிலாந்தில் தொழிலாளர் கட்சி 1900-1918 ஆகிய ஆண்டுகளில் தேர்தல் அறிக்கைகள் வெளியிட்டது.

மத்திய சட்டமன்றத்திற்கு நடைபெற்ற (Central Legislative Assembly) தேர்தல் மற்றும் மகாண தேர்தகளை முன்னிட்டு 1937 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி தேர்தல் அறிக்கை வெளியிட்டது. 1946 ஆம் ஆண்டு நடந்த தேர்தலை முன்னிட்டு கம்யூனிஸ்ட் கட்சி தேர்தல் அறிக்கை வெளியிட்டது.அதில் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து இந்தியாவை மீட்க வேண்டும் என்பன போன்ற பல கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன.

1951-1952 ஆண்டில் நடந்த இந்திய நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தலில் 14 தேசிய கட்சிகள் மற்றும் 39 மாநில கட்சிகள் போட்டியிட்டன மொத்தம் 53 அரசியல் கட்சிகளின் சார்பாக 1874 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

1952 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு காங்கிரஸ் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு வந்த இந்தியர்களுக்கு போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்படும், சிறந்த வெளியுறவு கொள்கை உருவாக்கப்படும் என்பன போன்ற 16 காங்கிரஸ் கட்சியின் தேர்தல் கருத்துக்கள் அறிக்கையி ல்வாக்குறுதிகளாக வழங்கப்பட்டன.

1952 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் காஷ்மீர் பிரச்சினை ஆங்கிலேயர்களை இந்தியாவை விட்டு வெளியேற்றுதல் என்பன போன்ற கருத்துக்கள் வலியுறுத்தி சொல்லப்பட்டன.

ஆச்சாரியா கிருபளானி அவர்கள் தலைமையிலான கிஷான் மஸ்தூர் கட்சி மற்றும் பிரஜா கட்சி, இந்திய சோசியலிஸ்ட் கட்சி போன்றவை தனித்தனியாக தேர்தல் அறிக்கைகள் வெளியிட்டன.

1952 முதல் 2024 வரை இந்தியாவில் நடந்த 18 தேர்தல்கள் மற்றும் நாடாளுமன்ற மக்களவை மாநிலங்களில் நடந்த சட்டமன்றத் தேர்தல்களில் கலந்து கொண்ட அரசியல் கட்சிகள் தங்களது கட்சிகளின் சார்பாக தேர்தல் அறிக்கைகள் வெளியிட்டன.

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் 1916 ஆம் ஆண்டு வெளியிட்ட பிராமணர் அல்லாதவர் அறிக்கை (The Non Brahmin Manifesto) 1920 ஆம் ஆண்டு நடந்த சென்னை மாகாண தேர்தலில் நீதிக்கட்சியின் அடிப்படை அரசியல் ஆவணமாக திகழ்ந்து கட்சியின் வெற்றிக்கு வழி வகுத்தது

சென்னை மாகாணத்தில் 1952 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்ற பொது தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் போட்டியிடவில்லை.

ஆனால் தங்கள் கட்சியின் கொள்கைகளை ஆதரிக்கும்த வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்குமாறு மக்களை கேட்டு திமுக தேர்தல் அறிக்கை வெளியிட்டது.

சென்னை மாகாணத்தில் 1957 ஆம் ஆண்டு நடந்த. சட்டமன்றத் தேர்தலில் திமுக முதன்முதலாக போட்டியிட்டு தேர்தல் அறிக்கை வெளியிட்டது. அந்தத் தேர்தல் அறிக்கையில் தேவிகுளம், பீர்மேடு, திருத்தணி போன்ற தமிழ் பகுதிகள் தமிழ்நாட்டுடன் ணைக்கப்பட வேண்டும், சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு என பெயர் சூட்ட வேண்டும், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பன போன்ற கொள்கைகள் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டன.

1962 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தில் நடந்த சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், தமிழ் ஆட்சி மொழி, இந்தி எதிர்ப்பு, கவர்னர் பதவி எதிர்ப்பு போன்ற கொள்கைகள் வலியுறுத்தப்பட்டன. 1962 ஆம் ஆண்டு தி.மு.க. வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையின் பின் இணைப்பாக தேர்தல் அறிக்கையின் முக்கிய கருத்துகளை விளக்கி கருத்து படங்கள் வெளியிடப்பட்டன.

1967 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தமிழ் உள்ளிட்ட 14 மொழிகள் தேசிய மொழிகளாக ஏற்கப்பட வேண்டும், என்பன போன்ற கட்சியின் லட்சியங்கள் இடம் பெற்றிருந்தன. தி.மு.க. வீட்டுக்கு விளக்கு நாட்டுக்கு தொண்டன் என்ற முழக்கம் தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தது.

1971 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் நடந்த சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டின் தேவைகள் கோரிக்கைகளாக மக்கள் முன்பு வைக்கப்பட்டன. 1977 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மாநில சுயாட்சி போன்ற தி.மு.க.வின் கொள்கைகள் வலியுறுத்தப்பட்டன.

1980 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்காக தி.மு.க. வெளியிட்ட.அந்தத் தேர்தல் அறிக்கையில் இலங்கைத் தமிழர் நலன், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து, காவிரி பிரச்சினை, சேலம் உருக்காலை போன்ற கோரிக்கைகள் மக்கள் முன்பு வலியுறுத்தி கூறப்பட்டன. 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிட்டது. அதில் தமிழ்நாட்டின் நலன் சார்ந்த வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

1984 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மண்டல் கமிஷன் பரிந்துரை, நிறைவேற்றம் போன்ற பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலுக்காக தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் சேது சமுத்திரத் திட்டம், போன்ற வாக்குறுதிகளாக வழங்கப்பட்டன. 1989 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலுக்கும் தி.மு.க. தனியாக தேர்தல் அறிக்கை வெளியிட்டது

1991 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலுக்காக தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டில் உச்ச நீதி மன்றத்தின் கிளை அமைக்கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் மக்கள் முன்பு வைக்கப்பட்டன. 1996 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் இலங்கைத் தமிழர் நலன் உள்ளிட்ட தமிழ்நாட்டின் நலன் சார்ந்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

1998 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டின் நலன்கள் முதன்மைப்படுத்தி அவை கோரிக்கைகளாக வைக்கப்பட்டன. 1999 ஆம் ஆண்டு நடந்த தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் கங்கை நதியும் காவிரி நதியும் இணைக்கப்படுதல், போன்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன.

2001 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டின் தேவைகள் தேர்தல் வாக்குறுதிகளாக வழங்கப்பட்டன. 2004 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மதச்சார்பின்மை கூட்டாட்சி முறை சமூக நீதி போன்ற கட்சியின் கொள்கைகள் வலியுறுத்தப்பட்டன. 2006 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தி.மு.க. தமிழ், ஆங்கிலத்தில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டின் நலன் சார்ந்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

2009 நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல அறிக்கையில் கல்வி மாநில பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும். கச்சத்தீவு மீட்கப் பட வேண்டும் போன்ற கட்சியின் கொள்கைகள் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டு வாக்குகள் கோரப்பட்டன. 2011 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் உச்ச நீதிமன்றத்தின் கிளை தமிழகத்தில் ஏற்படுத்தப் பட வேண்டும் போன்ற கருத்துக்கள் முன் வைக்கப் பட்டன.

2014 நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் சாதிவாரியான மக்கள் தொகை கணக் கொடுப்பு, புலம் பெயர்ந்தோர் நலன், புதுவைக்கு மாநில அந்தஸ்து போன்ற கோரிக்கைகள் மக்கள் முன் வைக்கப்பட்டன.

2016 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழ், ஆங்கிலத்தில் தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில்,சொன்னதை செய்வோம் செய்வதை சொல்வோம் எனும் முழக்கத்துடன் 501 வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டு முதல் முறையாக மாவட்டங்கள் வாரியான கோரிக்கைகளை உள் அடக்கி தனியாக மாவட்ட துணை தேர்தல் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. 2016 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழிலும் ஆங்கிலத்திலும் தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 290 வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிட்டது. அப்பொழுது நடந்த இடைத்தேர்தலை முன்னிட்டு தனியாக தேர்தல் அறிக்கை வெளியிட்டது. 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் அறிக்கையில் மத்தியில் தமிழ் ஆட்சி மொழி உள்ளிட்ட 505 வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அத்துடன் மாவட்ட வாரியான 1451 வாக்குறுதிகளை கொண்ட மாவட்ட தேர்தல் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை பல பத்திரிக்கைகளும் தொலைக்காட்சிகளும் பாராட்டின. தி.மு.க. தேர்தல் அறிக்கைதான் இந்த தேர்தலின் கதாநாயகன் என்று பல தேசிய மாநில அரசியல் தலைவர்கள் போற்றி பாராட்டினர்கள்.

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற மக்களவை தேர்தலை முன்னிட்டு தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மெட்ரோ ரெயில், எய்ம்ஸ் மருத்துவமனை போன்ற தமிழ்நாட்டின் தேவைகள் கோரிக்கைகளாக மக்கள் முன்பு வைக்கப்பட்டன.

ஆரம்பத்தில் வேட்பாளர்கள் அறிமுகம் மற்றும் கட்சிகளின் கொள்ளை விளக்கமாக இருந்து தேர்தல் அறிக்கை பின்னர் மாநில முன்னேற்றம் மக்கள் முன்னேற்றம் பற்றிய வாக்குறுதிகளை வழங்கி வாக்கு கேட்டும் அரசியல் ஆவணமாக மாறியது. கட்சிகளின் வெற்றிக்கு உறுதுணையாகும் தேர்தல் கருவியாக மாறி சமீப காலத்தில் தேர்தல் அறிக்கை மிக மிக முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. அரசியல் கட்சிகளின் வெற்றிகளை தீர்மானிக்கும் வலிமை மிக்க வாக்குறுதி பெட்டகமாகவும் தேர்தல் வெற்றி கருவியாகவும் தேர்தல் அறிக்கை விளங்குகிறது. எனவே அரசியல் கட்சிகள் தேர்தல் அறிக்கைகளை தங்களின் வெற்றி வெற்றி அடையாள சின்னமாக போற்றுகின்றன.

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கைகள் தமிழக அரசியல் மற்றும் இந்திய தேர்தல் வரலாற்றில் முக்கிய இடம் பெற்று வருகின்றன. கழகத்தின் தேர்தல் அறிக்கைகள் களத்தில் வெற்றி தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. தலைவரின் வாக்குறுதிகளான தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை மக்கள் தங்கள் வாழ்க்கை முன்னேற்ற சாசனமாக ஏற்று போற்றுகின்றனர். அனைத்து மக்களின் நலன், தமிழ் நாடு, இந்தியாவின் நலன் போற்றும் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கைகளை அரசியல்வாதிகள் மக்கள் மற்றும் அரசியல் அறிஞர்கள் போற்றுகின்றனர்.

பிற மாநில கட்சிகள் மற்றும் சில தேசிய அரசியல் கட்சிகள் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் உள்ள நல்ல கருத்துகளை ஏற்று நடைமுறைப் படுத்துகின்றன. தி.மு.க. தேர்தல் அறிக்கை மற்ற மாநிலங்களுக்கு முன்னேடி, காலத்தின் கண்ணாடி, மக்களின் சமூக அரசியல் சாசனம் ஆகும்.